சார்பு நீதிமன்றம், இலால்குடி.
நாள்.04.06.2026.
O.S.No.706/2018
PW 2 : லலிதா (வயது 69 ) க/பெ.குப்புசாமி
( சாட்சிக்கு சத்திய பிரமாண வாக்குமூலம் வாய்மொழியாக செய்விக்கப்பட்டது)

**2 ஆம் பிரதிவாதி தரப்பு கு.வி**

எனக்கு சாட்சியம் அளிக்க நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வரவில்லை மற்றும் எனது கணவர்அழைத்ததால் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். எனது முதல் விசாரணை வாக்குமூலம் தயாரிக்கும்போது, எனது கணவர் உடன் இருந்தாரா என்றால் இல்லை. வழக்கு எண் என்ன என்றால் தெரியாது. எனது கணவர் வழக்கில் சாட்சியம் அளிக்கும்போது, நான் மலேசியாவில் இருந்தததாக கூறியுள்ளேன் என்றும், எவ்வளவு காலம் மலேசியாவில் இருந்தேன் என்றால் நான் பிறந்து வளர்ந்தது மலேசியாவில்தான். திருமணத்திற்கு பிறகு நான் எனது கணவர் வீட்டில் இந்தியாவில் இருக்கிறேன்.

எனக்கு எத்தனை வயதில் திருமணம் ஆனது என்றால் 13 வது வயதில் திருமணம் ஆனது. திருமணத்திற்கு பிறகு 8 வருடங்கள் கழித்து பெண் குழந்தை எனக்கு பிறந்தது. எனக்கு 2 பெண் குழந்தைகள், 1 ஆண் குழந்தை வாரிசுகள் என்றால் சரிதான். இலால்குடி, ஆனந்திமேட்டில் என்னுடன் பிறந்த தம்பிகள் குடியிருக்கிறார்கள். இலால்குடி ஆனந்திமேட்டில் உள்ள சொத்துக்கள் அனைத்தும் எங்களது பூர்வீக சொத்துக்களா என்றால் இல்லை, எனது அப்பா சம்பாதித்த சொத்துக்கள்

எனது அப்பா சம்பாதித்த சொத்துக்கள் வீடா என்றால் வெள்ளாமை உடன் கூடிய விலைநிலங்கள். அந்த சொத்துக்களில் சர்வே எண்கள் என்ன என்றால் அதெல்லாம் தெரியாது. வழக்கு சொத்து விவரத்தில் காட்டியுள்ள சொத்துக்கள் எத்தனை பிரிவுகளாக பிரித்து காட்டப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

வழக்கு சொத்துக்களின் கிழமேல் மற்றும் தென்வடல் அளவுகள் மீட்டரில் தெரியுமா என்றால் தெரியாது.சொத்தின் அளவுகளை டேப் வைத்து நான் அளந்து பார்த்துள்ளேனா என்றால் இல்லை. எனது பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளபடி இடிந்து போனதாக கூறும் வீட்டின் அளவுகள் தெரியுமா என்றால் தெரியாது. எந்த தேதிமாதம் வருடம் மேற்படி வீடு இடிந்தது என்றால் தெரியாது. பெரிய மழை பெய்தபோது இடிந்துவிட்டது. சாட்சி தானாக முன்வந்து தனது கையால் அளவுகளை காட்டி சிறிய அளவிலான வீடு தான் என்று கூறுகிறார். எந்த வருடம் பெய்த மழையில் வீடு இடிந்தது என்றால் தெரியாது.

சீரங்காயி என்னுடன் வசித்தார் என்பதற்கு என்னிடம் ரேசன் கார்டு உள்ளதா என்றால் ரேசன் கார்டை என்னிடம் அவர் கொடுக்கவில்லை. நானும் சீரங்காயியும் ஒன்றாக ஒரே வீட்டில் வசித்தோம் என்பதை காட்ட ஆதாரம் உள்ளதா என்றால் இல்லை. நான் கூறுவது போல், வீடு இடிந்து போகவில்லை என்றும் சீரங்காயி என்னுடன் சேர்ந்து வசிக்கவில்லை என்றும் வழக்கிற்காக சீரங்காயி என்னுடன் வசித்ததாகவும், அவரை நான் பார்த்துக்கொண்டதாகவும் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எந்தெந்த நத்தம் சர்வே எண்களில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. வழக்கு சொத்துக்களை பொறுத்து சீரங்காயி ஏற்படுத்திய ஈட்டுகடன் பற்றி தெரியுமா என்றால் 1960 ல் ஒரு ஈட்டுகடன் பத்திரமும், 1958 ல் ஒரு போக்கிய பத்திரமும் செய்திருந்தார்.

மேற்படி பத்திரங்களை நான் படித்து பார்த்துள்ளேனா என்றால் எனக்கு எழுத படிக்க தெரியாது நான் படித்து பார்க்கவில்லை. என்னிடம் காட்டப்படும் எனது நிருபண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் என்ன என்று எனக்கு படிக்க தெரியாது என்றால் சரிதான்.

மேற்சொன்ன 1958, 1960 க்கான பத்திரங்களின் பத்திர எண்கள் என்ன என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. சீரங்காயி சொத்துக்களில் எதிரிடை அனுபவ

பாத்தியம் எனக்கு இருப்பதாக நான் கூறுகிறேனா என்றால் ஆமாம். சீரங்காயி கொடுத்த ஈட்டுகடன் மற்றும் போக்கிய பத்திரத்தின்மூலம் எனக்கு சொத்தின் அனுபவம் வந்துவிட்டது என்பதால், சிரங்காயி பெயரில் பட்டா கொடுத்தது தவறு என்று நான் வருவாய் துறையில் ஆட்சேபனை தெரிவித்தேனா என்றால் இல்லை.

நத்தம் நிலவுடைமை திட்டத்தில் எனது கணவர் கிரிஜாவிற்கு விற்பனை செய்த புல எண்.388/15 என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். 2005 ஆம் வருடம் தாவா சொத்து மற்றும் அதன் அருகில் உள்ள சொத்துக்களுக்கு வருவாய் துறையில் உட்பிரிவு செய்த விவரம் தெரியுமா என்றால் தெரியாது. எனது கணவர் 22 ஏக்கர் 20 செண்ட் அளவுள்ள இடத்திற்கு வழக்கு தாக்கல் செய்துள்ள விவரம் தெரியுமா என்றால் நான் அது பற்றி அவரிடம் கேட்டுக்கொள்ளவில்லை, அதனால் தெரியாது.

எனது கணவர் கிரிஜாவிற்கு செய்த விற்பனையை மறைத்து இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் அவர் எதையும் மறைக்கவில்லை. 1958 போக்கிய பத்திரத்திலும், 1960 ஈட்டுகடன் பத்திரத்திலும் முத்துகண்ணுவிற்கும், சின்னதுரை முத்துராஜா, சீரங்காயி மற்றும் எனக்கும் உள்ள உறவு முறை பற்றி குறிப்பிடப்பட்டுள்ளதா என்று எனக்கு தெரியுமா என்றால் நான் படித்து பார்க்கவில்லை அதனால் தெரியாது.

சின்னதுரை முத்துராஜா, சீரங்காயி அம்மாள் ஆகியோர்களுடன் எனது மாமனார் முத்துகண்ணுவிற்கும் எனது கணவருக்கும், எனக்கும் எந்த ஒரு உறவும் இருப்பதாக மேற்படி பத்திரங்களில் குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் அவ்வாறு சொல்லாததற்கு நான் ஒன்றும் செய்ய இயலாது.

மேற்படி நபர்களுக்குள் எந்த உறவும் இல்லை என்பதால் தான் அது பற்றிய விவரம் ஆவணத்தில் குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல. எனது கணவர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வம்சாவழி விவரத்தை படித்து பார்த்தேனா என்றால் இல்லை. அது பற்றி எனது கணவருக்கு தான் தெரியும். வா.சா.ஆ.3 வம்சாவழி

விவரத்தை எனது கணவர் பொய்யான தகவல்களுடன் தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல.

எனக்கும் சீரங்காயிக்கும் இடையில் எந்தவித உறவுமுறையும் கிடையாது என்றால் எனது அப்பாவுடன் உடன் பிறந்த சகோதரி அதனால் தான் நான் இந்த இடத்தில் திருமணம் செய்து வந்தேன். எனது தகப்பனார் பிறந்து,வாழ்ந்து, மறைந்த இடம் எது என்றால் ஆனந்திமேடு. பிழைப்பிற்காக மலேசியா சென்றார். எனது தகப்பனார் பெயர் கிருஷ்ணன். அவரது தகப்பனார் பெயர் தெரியாது.

எனது தகப்பனார் கிருஷ்ணனும் சீரங்காயியும் ஒரே கூரையின் கீழ் வசித்து வந்தார்கள் என்பதை நிருபிக்க 1952 ஆம் வருடத்திற்கான வாக்காளர் பட்டியலை பார்த்தால் உண்மை விவரம் தெரியவரும் என்றால் சரிதான். மேற்படி வாக்காளர் பட்டியல் விவரத்தை தாக்கல் செய்ய நானும் எனது கணவரும் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரிதான்.

சீரங்காயியும் எனது தகப்பனாரும் உடன் பிறந்த சகோதர, சகோதரி இல்லை என்றும் வழக்கிற்காக அவ்வாறு பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. எனது கணவர் வழக்கில் உத்திரகிரியை தாக்கல் செய்துள்ளார் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியும். அந்த வா.சா.ஆ.4 உத்திரகிரியை பத்திரிக்கையில் எனக்கும் சீரங்காயிக்கும் உள்ள உறவு முறையை பற்றி குறிப்பிடாத விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

எனக்கும் சீரங்காயி அம்மாளுக்கும் இடையில் எந்த உறவு முறையும் இல்லை என்பதால் தான் அதற்கான விவரத்தை வா.சா.ஆ.4 ஆவணத்தில் எனது கணவர் குறிப்பிடவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியவில்லை. கருமாதி பத்திரிக்கையில் உறவு முறை போடும் வழக்கம் இல்லை.

வா.சா.ஆ.4 ஆவணத்தில் உறவு முறை குறிப்பிடவில்லை என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. வழக்கு தாக்கல் செய்வதற்காக திட்டமிட்டு

வா.சா.ஆ.4 ஆவணத்தை நானும் எனது கணவரும் உருவாக்கியுள்ளோம் என்றால் சரியல்ல.

சீரங்காயிக்கு நானோ எனது கணவரோ எந்த வித சவரட்சணையும் செய்யவில்லை என்றால் சரியல்ல. சீரங்காயி எந்த மாதம் வருடம் இறந்தார் என்றால் அதெல்லாம் எனக்கு தெரியாது, அது பற்றி எனது கணவருக்கு தான் தெரியும். எந்த தமிழ் மாதம் எந்த திதியில் இறந்தார் என்று தெரியுமா என்றால் தெரியாது.

தாவா சொத்தை 2 ஆம் பிரதிவாதியிடமிருந்து கைப்பற்றவேண்டும் என்பதற்காக எனது கணவர் பொய்யாக தாவா வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. அதற்கான பத்திர பட்டா எனது கைவசம் உள்ளது. அந்த பத்திர பட்டாவை பார்த்தால் உண்மை விவரம் தெரியவரும் என்றால் சரிதான். சாட்சி தானாக முன்வந்து நான் குடியிருக்கும் வீட்டின் சர்வே எண்.15 எனது அத்தை சீரங்காயி குடியிருந்த வீட்டின் சர்வே எண்.14 என்று சாட்சி கூறுகிறார்.

மேற்சொன்ன சர்வே எண் உட்பிரிவுகள் எந்த வருடம் பிரிந்தது என்றால் எனக்கு திருமணம் ஆன காலத்திலேயே பிரிந்துவிட்டது. நான் கூறும் 14 என்பது கிரிஜாவிற்கு விற்பனை செய்த 388/14 புல எண்ணை குறிக்கும் என்றால் சாட்சி கிரிஜாவிற்கு விற்பனைசெய்த சொத்தில் 7.5 செண்ட் இருந்தது என்றும் அதில் 5 செண்டை நடுவில் விற்றது போக, இருபுறமும் 1.25 சென்ட் இடம் இருப்பதாகவும் அதற்கு அருகில் எனது அத்தை சீரங்காயி இடம் உள்ளது என்று கூறுகிறார்.

நான் கூறுவது போல் கிரிஜாவிற்கு விற்பனை செய்த சொத்திற்கான நான்கெல்லைகளில் மேற்படி விவரங்கள் குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றும் வழக்கிற்காக இருபுரமும் 1.25 செண்ட் இருப்பதாக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல.

சர்வே எண்.388/14 புலத்தில் உள்ள அனைத்து விஸ்தீரணமும் கிரயம் மூலமாக கிரிஜாவிற்கு சென்று விட்டது என்ற விவரம் தெரியுமா என்றால் இருபுறமும் 1.25 செண்ட் இடம்விட்டு தான் விற்பனை செய்தோம். கிரிஜாவிற்கு விற்ற சொத்தை

டேப் வைத்து அளந்து பார்த்தேனா என்றால் நான் அளந்து பார்க்கவில்லை. சர்வே எண்.388/14 புல எண்ணின் அடங்கலில் அதன் நான்கு புறமும் என்னென்ன சர்வே எண்கள் வருகிறது என்று நான் பார்த்து தெரிந்து கொண்டேனா என்றால் அதெல்லாம் எனக்கு தெரியாது, எனது கணவருக்கு தான் தெரியும்.

சர்வே எண்.388/14 ஐ சுற்றியுள்ள நத்தம் பட்டாக்களில் உள்ள அளவுகள் தவறு என்று நான் வருவாய் துறையில் அதற்கான நடவடிக்கை எடுத்தேனா என்றால் எனது கணவருக்கு தான் அது பற்றி தெரியும். நான் நடவடிக்கை எடுத்தேனா என்றால் இல்லை எனது கணவர் தான் அனைத்தையும் பார்த்து கொள்கிறார்.

எங்கள் கிராமத்தில் நடந்த நத்தம் நில உடைமை திட்டத்தில் வழங்கிய பட்டாக்கள் மற்றும் அதன் அளவுகளை ஒப்புக்கொண்டு தான் நான் அது குறித்து எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் தெரியாது, எனது கணவரை கேட்டால் தான் அதற்கு விளக்கம் கூறுவார்.

கிரிஜாவிற்கு விற்பனை செய்த சொத்தை அவர் ரத்தினம் மனைவி சித்ராவிற்கு விற்பனை செய்துள்ளாரா என்றால் ஆமாம், நாங்கள் விற்ற சொத்தை அப்படியே விற்றுள்ளார். சித்ரா அந்த இடத்தில் கெட்டி மெத்தை வீடு, தரைதளம் மற்றும் முதல் தளம் கட்டியுள்ளார் என்றால் சரிதான்.

அதற்கு கிழக்கே உள்ள ஓட்டுவில்லை வீடு எனக்கு உரிமையானதா, சீரங்காயி சின்னதுரைக்கு உரிமையானதா என்றால் எங்களுக்கு உரிமையானது. கிரிஜாவிற்கு விற்பனை செய்த அன்றே நங்கமங்கலம் சத்திரம் கோவிந்தராஜ் அவர்களுக்கு எனது கணவர் எழுதி கொடுத்த ஈட்டுகடன் பத்திரம் பற்றி எனக்கு தெரியுமா என்றால் தெரியாது, எனது கணவருக்கு தான் தெரியும்.

அந்த ஈட்டுகடன் பத்திரத்தில் நாளது தேதியில் கிரிஜா கிரயம் பெறும் மனைக்கு கிழக்கு என்று கூறியுள்ளது எதை குறிக்கும் என்றால் எனது கணவரை தான் கேட்கவேண்டும். ஈட்டுகடன் வைத்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

கோவிந்தராஜன் சொத்திற்கோ, ரெங்கராஜன் மகன் விஜயகுமார் சொத்திற்கோ நாங்கள் ஆசைபடுகிறோமா என்றால் இல்லை.

எனது கணவர் கிரிஜாவிற்கு கிரயம் செய்து கொடுத்துள்ள பத்திரத்தில் சரியான தகவல்களை கூறி தான் கிரயம் செய்து கொடுத்துள்ளார் என்றால் சரிதான். சர்வே எண். 388/14 புலத்தில் சீரங்காயி சின்னதுரை பெயரில் நத்தம் பட்டா ஏற்பட்டுள்ளதையும் 388/15 புலத்தில் முத்துகண்ணு பெயரில் நத்தம் பட்டா ஏற்பட்டதையும் கிராம கணக்குகளில் பார்த்து தெரிந்து கொண்டேனா என்றால் எனது வீட்டுக்காரரை தான் கேட்கவேண்டும்.

எனது கணவர் தாக்கல் செய்துள்ள வழக்கில் சாட்சியம் அளிக்கவேண்டும் என்று என்னை அழைத்தாரா என்றால் எனது பெயரில் வழக்கு உள்ளது என்று கூறினார். எனது பெயரில் வழக்கு உள்ளது அதனால் நான் சாட்சியம் அளிக்கவேண்டும் என்று எனது கணவர் தான் என்னிடம் கூறினார்.

இந்த வழக்கிற்கான பிராது விவரத்தை நானும் எனது கணவரும் சேர்ந்து தான் கூறினோம். இந்த வழக்கு பரிகார காலத்தில் குறிப்பிட்டுள்ள ஏ மற்றும் பி-க்கான பரிகாரம் என்ன என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. வழக்கு பற்றிய விவரம் அனைத்தும் எனது கணவருக்கு தான் தெரியும். எனது அத்தை வீட்டு சொத்திற்காக நான் சாட்சியம் அளிக்கிறேன். எனது கணவருக்கு தான் அனைத்து விவரமும் தெரியும் என்று சாட்சி மீண்டும் கூறுகிறார்.

நான் பிறந்து வளர்ந்தது மலேசியாவில் என்பதால் வழக்கு சொத்து பற்றிய விவரம் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. எனக்கு திருமணம் ஆகி 70 வருடங்கள் ஆகிறது என்பதால் விவரம் எனக்கு தெரியும். 13 வது வயதில் திருமணம் ஆனது. நான் சத்துணவு அலுவலராக பள்ளியில் வேலை பார்த்து ஓய்வு பெற்றுவிட்டேன். எந்த வருடம் ஓய்வு பெற்றேன் என்றால் தெரியாது. நான் சத்துணவு பணியில் என்ன வேலையில் இருந்தேன் என்றால் Main Cook ஆக இருந்தேன்.

அந்த பணியில் சேர்வதற்கு அடிப்படை கல்வி தகுதி என்ன என்றால் அப்போதெல்லாம் படித்தேனா இல்லையா என்று பாதர் கேட்கவில்லை. கும்பகோணம் பாதர் வேலை வாங்கி தந்தார் நான் சேர்ந்தேன். நான் Main cook ஆக வேலை பார்த்துள்ளேன் என்பதால் எனக்கு அடிப்படை கல்வி தகுதி உள்ளது என்றாலும் வழக்கிற்காக படிக்கவில்லை என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது சாட்சிய வாக்குமூலம் பொய்யான தகவல்களை கொண்டுள்ளது என்பதால் எனது சாட்சிய வாக்குமூலம் ஏற்கதக்கதல்ல என்றால் சரியல்ல.

**<u>ம.வி</u>** - இல்லை.

*/ signed/*
லலிதா

சாட்சி சொல்ல சொல்ல திறந்த நீதிமன்றத்தில் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு சாட்சி சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையெழுத்திட்டார

R.MOHANA Digitally signed by R.MOHANA Date: 2026.06.04 18:41:14 +0530

சார்பு நீதிபதி
இலால்குடி